# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

அவர் காட்டிய பாதையில், நம்முடைய திராவிட மாடல் அரசும் இன்றைக்கு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது! அண்ணல் அம்பேத்கர் பிறந்த ஏப்ரல் 14ஆம் நாளை, 'சமத்துவ நாளாக' நாம் அறிவித்தோம். அந்த நாளை கொண்டாட மட்டுமல்ல, அனைவரையும் சமத்துவ உறுதிமொழி எடுக்க ஆணையிட்டவன்தான், இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை பெருமையோடு நான் தெரிவிக்க விரும்புகிறேன்!

**அம்பேத்கரை போற்றும் திராவிட மாடல் அரசு!**

என் பாசத்துக்குரிய எழுச்சித் தமிழர் நம்முடைய தொல்.திருமாவளவன் அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, புரட்சியாளர் அம்பேத்கர் மணிமண்டபத்தில், முழு உருவ வெண்கலச் சிலையை நான் திறந்து வைத்தேன். திராவிட முன்னேற்றக் கழகத் துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா அவர்களின் கோரிக்கையை ஏற்று, அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட நூல்களை தமிழில் மொழிபெயர்த்து அதை வெளியிடக்கூடிய அறிவிப்பும் செய்யப்பட்டிருக்கிறது. செம்பதிப்பாக அது விரைவில் வெளிவரயிருக்கிறது. அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புரட்சியாளர் அம்பேத்கரை போற்றுவது மட்டுமல்ல, அவரின் சிந்தனைகளை செயல்படுத்தவேண்டும் என்று நினைக்கக் கூடியவன்தான் இன்றைக்கு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

தந்தை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர், அயோத்திதாச பண்டிதர் ஆகியோர் காண நினைத்த சமத்துவ சமுதாயத்தை அமைப்பதற்கான பாதையில் நடைபோடுவது தான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி! ஒடுக்கப்பட்ட மக்கள், சமூகம் அரசியல் பொருளாதாரம் என்று அனைத்து வகையிலும் மேம்பாடு அடைய வேண்டும்! "அதுதான் உண்மையான முழுமையான விடுதலை" என்று அண்ணல் அம்பேத்கர் கருதினார். அந்த வழியில் உருவாக்கப்பட்ட திட்டம் தான், 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்.'

நம்முடைய நாடு விடுதலை அடைந்த பிறகு, இது வரை பட்டியலின பழங்குடியினருக்கு என்று தனியாக முதன்முதலாக தொடங்கப்பட்ட தொழில் திட்டம், இது மட்டும்தான் என்பது தனிப்பெருமை! ஒடுக்கப்பட்ட மக்கள் பொருளாதார மேம்பாட்டை அடைய, 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 'அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்' தொடங்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், தொழில் முதலீட்டுக்கு 35 விழுக்காடு தொகையை மானியமாகவும், 65 விழுக்காடு தொகைக்குரிய வங்கிக் கடன் வட்டியில், 6 விழுக்காடு தொகை வட்டி மானியமாகவும் அளிக்கப்படுகிறது. மிகவும் குறுகிய காலத்திலேயே இரண்டாயிரத்து 136 பயனாளிகளுக்கு வங்கிகளால் கடன்கள் அனுமதிக்கப்பட்டு, அதில் தகுதியான, ஆயிரத்து 303 தொழில் முனைவோர்க்கு, அரசு மானியமாக மட்டும் 160 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. இதில், முக்கிய மான அம்சம் என்னவென்றால், 288 பெண் தொழில் முனைவோர்! அவர்களுக்கு மட்டும், 33 கோடியே 9 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கபட்டிருக்கிறது!

**ஆதிதிராவிட - பழங்குடியினருக்கு எண்ணற்ற திட்டங்கள்**

இந்தத் திட்டம் மட்டுமல்ல, கடந்த 3 ஆண்டில் திராவிட மாடல் ஆட்சியில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கு செய்யபட்ட திட்டங்கள் போன்று, வேறு எந்த ஆட்சியிலும் நடந்திருக்காது என்பதை, என்னால் நெஞ்சை நிமிர்த்தி இங்கே நான் சொல்ல முடியும்.

முக்கியமான சிலவற்றை நான் தலைப்புச் செய்திகளாக highlightஆக மட்டும் சொல்கிறேன்.

**ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆதிதிராவிடர் பகுதிகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்தும் அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்!**

**முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான (CM Arise) தொழில் முனைவு திட்டம்!**

**இந்தத் திட்டம் மூலமாக இதுவரை சுமார் 470 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு முன்னெடுப்புகளால், 78 ஆயிரத்து 955 பேர் பயன் பெற்றுள்ளனர்.**

**விவசாயத் தொழிலாளர்களாக உள்ள ஆதிதிராவிட மகளிரை நில உடமையாளர்களாக மாற்றும், 'நன்னிலம் திட்டம்'!**

**சாதி வேறுபாடுகளற்ற 199 முன்மாதிரி சமத்துவக் கிராமங்களுக்கு 30 கோடி ரூபாய் பரிசுத்தொகை வழங்கிய திட்டம்!**

**பழங்குடியினர் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த, ஆண்டுக்கு 250 கோடி என்று 1000 கோடி ரூபாயில் தொல்குடி திட்டம்!**

**பழங்குடியின உண்டு உறைவிடப் பள்ளிகளை மறுசீரமைக்கும் திட்டம்!**

**பழங்குடியினர் தொடர்பான ஆய்வு செய்பவர்களுக்கு தொல்குடி புத்தாய்வுத் திட்டம்!**

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல விடுதி கட்டடங்கள் புதிதாக கட்டவும், மேம்படுத்தவும் 400 கோடி ரூபாய் அதற்கென்று ஒதுக்கீடு!**

**ஆதிதிராவிட பழங்குடியின மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்வி பயில, உதவித்தொகை! அவர்கள் முனைவர் படிப்புக்கான கல்வி உதவித் தொகை உயர்வு!**

**சட்டக் கல்வி பயில சிறப்புச் சலுகை! உயர்திறன் ஊக்கத்தொகை திட்டம்!**

**479 பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள், ஹைடெக் லேப்!**

**ஆதிதிராவிட பழங்குடியின மாணவர் விடுதி மாணவர்களுக்கு உணவுப்படி உயர்வு உள்ளிட்ட பல்வேறு வசதிகள்!**

**ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் புதிய வகுப்பறைகள், அறிவியல் ஆய்வுக்கூடங்கள் கட்ட 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு!**

**நரிக்குறவர் மற்றும் இருளர் இன மக்களுக்கு ஆயிரத்து 500 புதிய வீடுகள் மற்றும் அவர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்த சிறுவணிக கடன்!**

**பழங்குடியின மக்களுக்காக, தேசிய தொல்குடி மாநாடு! பழங்குடியினர் மகளிர் மேம்பாட்டிற்காக, அனைத்து மாவட்டங்களிலும் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, சமுதாயக்கூடங்கள் பராமரிப்பு, பள்ளிகளில் உணவு தயாரித்து வழங்குதல், பொலிவு - ஹெல்த் கேர் சொசைட்டி என்று பல திட்டங்கள்!**

**பண்டைய பழங்குடியினருக்கு 750 புதிய வீடுகள்!**

அழிவின் விளிம்பில் இருக்கும் பண்டைய பழங்குடியின குடும்பங்களுக்கு 750 புதிய வீடுகள்!

ஈரோடு மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் பழங்குடியின மக்கள் அதிகம் வாழும் தொலைதொடர்பு வசதி இல்லாத 78 கிராமங்களில் நீண்ட தூர கம்பியில்லா இணையப் வசதிகள். பழங்குடியின இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற திறன் பயிற்சி. அரியலூர் மாவட்டத்தில், ஆண்டிமடம் ஜெயங்கொண்டம், உடையார்பாளையம் சரகங்களில் உள்ள பழங்குடியின இருளர் மக்கள் வனத்துறைக்கு உட்பட்ட முந்திரி தோட்டத்தில் முந்திரிக் கொட்டை சேகரம் செய்ய உரிமை. 50 கோடி ரூபாய் மதிப்பில் ஆதிதிராவிட தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க ஈங்கர் மற்றும் முதலிபாளையம் தொழிற்பேட்டைகள் புனரமைப்பு!

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில் சிறந்த எழுத்தாளர்களுக்கான பரிசுத்தொகை உயர்வு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குறித்த சிறந்த படைப்புகள் மொழிபெயர்ப்பு. வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களை காவல்துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள். சமுதாய கண்ணோட்டத்துடன் அணுக 'சமத்துவம் காண்போம்' எனும் பயிற்சி!

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோர் சிறப்புக் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம்!

முதல்முறையாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கலாச்சார நிகழ்வாக 'ஆதி கலைக்கோல் விழா!'

ஜெய் பீம் தொழிலாளர்கள் மற்றும் சிறு வணிகர்கள் நல சங்கம். இதெல்லாம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களை முன்னேற்ற வகுதற்கான திட்டங்கள் என்றால், இந்தத் திட்டங்கள் எல்லாம் முறையாக செயல்படுத்தப்படுகிறதா? என்பதை கண்காணிக்க தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல்திட்ட சட்டத்தையும் இயற்றி இருக்கிறோம்.

சட்டம் மட்டுமல்ல; தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையத்தை உருவாக்கி. அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுகிறோம். சவாலாக சொல்கிறேன். இத்தனை திட்டங்கள் வேறு எந்த ஆட்சியிலும் நடைபெறவில்லை என்பதை நான் திட்டவட்டமாக தெரிவிக்க விரும்புகிறேன்!

சமூகத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் எத்தனை செய்தாலும், நம்முடைய அரசுக்கு களப்பணியில் நல்ல பெயர் கிடைக்க முழு முதல் காரணம், தூய்மைப் பணியாளர்கள்தான்! நம்முடைய பணிகளை ஊடகங்களும், பொதுமக்களும் பாராட்டும்போது, நான் மனதுக்குள் உங்களை தான் நினைத்துக்கொள்வேன். அரசு அதிகாரிகள் - ஊழியர்கள் - மாநகராட்சி பணியாளர்கள் - தூய்மை பணியாளர்கள் - காவலர்கள் - மின்வாரிய ஊழியர்கள் என்று எல்லோரும் சேர்ந்து நேரம் காலம் பார்க்காமல் ஆற்றிய பணிகளால்தான் அந்த நல்ல பெயர் நமக்கு கிடைக்கிறது!

**தூய உள்ளம் கொண்ட பணியாளர்கள்!**

நான் எத்தனை நன்றி சொன்னாலும், அதெல்லாம் உங்கள் தொண்டுக்கு நிச்சயமாக அது ஈடாகாது! அதனால்தான், உங்களின் சுயமரியாதையை உங்கள் பணிக்கான மரியாதையை கொடுக்க உங்களில் ஒருவனாக உங்கள் கூடவே நான் இருக்கிறேன்! என்னைப் பொறுத்தவரைக்கும், தூய்மைப் பணியாளர்கள் என்று சொல்வதைவிட, தூய உள்ளம் கொண்ட பணியாளர்கள் என்றுதான் சொல்லவேண்டும்! உங்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகள், பாராட்டுக்கள்!

தூய்மைப் பணியாளர்களின் நலனுக்காக நம்முடைய திராவிட மாடல் அரசால், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் தொடங்கப்பட்டது. அந்த வாரியம் தொடங்கப்பட்டது முதல் 2021ஆம் ஆண்டுவரை 18 ஆயிரத்து 225 உறுப்பினர்கள் மட்டும்தான் பதிவு செய்திருந்தார்கள். ஆனால், அரசின் நலத்திட்டங்கள் மற்றும் மானியங்கள் எல்லாமே, அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கும் சென்றடைய வேண்டும் என்று நம்முடைய அரசால் அதற்குரிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, கடந்த மூன்று ஆண்டுகளில்,

3 இலட்சத்து 6 ஆயிரத்து 775 உறுப்பினர்கள் இப்போது பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் பல்வேறு நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது. உங்களுக்கு மருத்துவக் காப்பீட்டு அட்டை கிடைப்பதில்கூட பிரச்சினை இருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய கவனத்திற்கு வந்தது. உடனே அதை வழங்க நான் உத்தரவிட்டேன்.

அதன் தொடர்ச்சியாக, இன்று 35 ஆயிரம் உறுப்பினர்களுக்கு மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில், பதிவு செய்திருக்கும் உறுப்பினர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக. அடுக்குமாடிக் குடியிருப்புகளில் 90 சதவீதம் அரசு மானியத்துடன் ஆயிரம் வீடுகள் பல்வேறு மாவட்டங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. இத்துடன், திருவண்ணாமலையில் தற்காலிக வீட்டில் வசித்து வரும் நரிக்குறவர் - தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு முழு மானியத்துடன் தாட்கோ மூலமாக வீடு கட்டித் தரப் போகிறோம். நம்முடைய குறிக்கோள் மனிதக் கழிவுகளை மனிதர்கள் அகற்றும் அவல நிலைக்கு, முழுமையாக முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்.

**செல்வப்பெருந்தகை கோரிக்கை உடனடியாக ஏற்கப்பட்டது!**

நம்முடைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர். அருமை சகோதரர் செல்வப்பெருந்தகை அவர்கள் ஒருமுறை என்னை சந்தித்து, தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழிற்சங்கம் அமைப்புடன் இணைந்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தலாம் என்று ஒரு கோரிக்கை வைத்தார். அதைக் கேட்டபோது நல்ல திட்டமாக இருந்தது; சிறப்பான திட்டமாக இருந்தது என்று நான் உடனடியாக அதிகாரிகளை அழைத்து, கலந்து பேசி, உடனே அந்தக் கோரிக்கையை பரிசீலித்து. கடந்த 28.02.2023 அன்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டோம். இந்தப் பணிகளை இயந்திரமயமாக ஆக்கிருக்கிறோம்.

**சமூக நீதி வழியாக சமத்துவ சமுதாயம்!**

சென்னை பெருநகரில் இருக்கும், கழிவுநீர் கட்டமைப்பு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள 539 இயந்திரங்கள் பயன்பாட்டில் இருக்கிறது. புதிதாக 58 கழிவுநீர் பராமரிப்பு இயந்திரங்கள் 28 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கடந்த ஆகஸ்ட் 12 அன்று சென்னை குடிநீர் வாரியத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த இயந்திரங்களை இயக்கவும், கழிவுநீர் கட்டமைப்புகளை பராமரிக்கவும், 728 நிரந்தரப் பணியாளர்கள் மற்றும் ஆயிரத்து 489 ஒப்பந்த பணியாளர்கள் மூலமாக இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் மூலமாக, பணியாளர்களுக்கு மாதத்திற்கு குறைந்தபட்ச வருமானமாக தலா 50 ஆயிரம் என்று 7 ஆண்டுகளுக்கு உறுதி செய்யப்படும். இந்தப் பணிகளுக்காக 500 கோடியே 24 இலட்சம் ரூபாய் நிர்ணயிக்கப்பட்டி ருக்கிறது. இதன்மூலமாக இந்த குடும்பத்தினருக்கு நிரந்தர வருமானம் உறுதி செய்யப்பட்டு அவர்களின் வாழ்வாதாரத்தையும், மாண்பையும் மேம்படுத்த இந்த சிறப்புத் திட்டம் வழிவகுத்திருக்கிறது.

இப்படி பட்டியலின, பழங்குடியின மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் செய்வதுடன், நம்முடைய கடமை முடிந்துவிட்டதாக என்று நான் கருதவில்லை. சமூக நீதி, சுயமரியாதை, சமத்துவம், சகோதரத்துவம், பெண்ணுரிமை, ஒடுக்கப்பட்டோர் உரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய திராவிடவியல் கோட்பாடுகளை சட்டரீதியாக மாற்றி கொள்கைகளை ஆட்சி நெறிமுறைகளாக ஆக்கவேண்டும் என்று நினைக்கிறோம். அதற்காக தொடர்ந்து உழைக்கிறோம்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் நிறைவேற்றாத, புதுமை திட்டங்களை நாம் நிறைவேற்றுகிறோம். சமூகநீதி வழியாக, சமத்துவ சமுதாயத்தை படைக்க பாடுபடுகிறோம்! நம்முடைய இலட்சிய பயண வழியில் ஒரு சில தடைகள், இடர்பாடுகள் இருப்பதை நான் மறுக்கவில்லை. உடனே அதை மட்டும் சிலர் பெரிதுப்படுத்தி, அரசியலாக பார்க்க என்னென்ன பேசுகிறார்கள். "இதுதான் பெரியார் மண்ணா? இதுதான் அம்பேத்கர் மண்ணா?" என்று கேள்வி கேட்கிறார்கள்.

ஒரு இடத்தில் நடந்த சம்பவத்தை முழுமையாக புரிந்துகொள்ளாமல், அதில் அரசின் செயல்பாடுகளை தெரிந்துக்கொள்ளாமல், தெரிந்திருந்தாலும், திட்டமிட்டு வதந்திகளை பரப்பி, நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு அவப்பெயர் உண்டாக்கவேண்டும் என்று நினைக்கிறவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது; உங்கள் மதவெறி – சாதி வெறி எண்ணம் இந்த பெரியார் மண்ணில், அம்பேத்கர் கொள்கைகள் உரம் பெற்று இருக்கும் மண்ணில் ஒருபோதும் நிறைவேறாது, ஒருபோதும் நிறைவேறாது. இந்த ஸ்டாலின் இருக்கும் வரை உங்களால் அதை நிறைவேற்ற வும் முடியாது.

**சமத்துவ சமுதாயத்தை உருவாக்கியே தீருவோம்!**

தந்தை பெரியாரும், புரட்சியாளர் அம்பேத்கருமே தாங்கள் வாழ்ந்த காலத்தில் இதுபோன்ற பல நெருக்கடிகளை எதிர்கொண்டு, எதிர்நீச்சல் போட்டுதான் இலட்சியப் பயணத்தை தொடர்ந்தார்கள். அவர்களின் கொள்கை வழி நடக்கும் நம்முடைய அரசும், சமூகத்தில் நிலவும் இடர்பாடுகளை நீக்கி, சமூகத்தை பிளவுபடுத்தும் சக்திகளை மக்களிடம் அம்பலப்படுத்தி, சமூக நீதிக் கொள்கையை நிலைநாட்டி, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கியே தீருவோம்! இதுதான் தந்தை பெரியார் மீதும், புரட்சியாளர் அம்பேத்கர் மீதும் நாங்கள் எடுக்கும் உறுதிமொழி!

ஆதிதிராவிடர் பழங்குடியினர் விழிப்புணர்வு கூட்டத்தில் உரையாற்றிய நான் ஐந்து இலக்குகளை குறிப்பிட்டேன்.

முதல் இலக்கு, கல்வி, வேலைவாய்ப்பில் அவர்கள் உரிய இடங்கள் பெறவேண்டும்!

இரண்டாவது இலக்கு, சமூக அமைப்பில் அவர்கள் எந்தச் சூழலிலும் புறக்கணிக்கப்படக் கூடாது!

மூன்றாவது இலக்கு, எக்காரணம் கொண்டும் சாதியின் பெயரால் தடுக்கப்படக் கூடாது!

நான்காவது இலக்கு, அரசியல், பொருளாதாரம், கல்வி ஆகிய அனைத்து மட்டத்திலும் அவர்கள் வளர்ச்சி உறுதிசெய்யப்படவேண்டும்!

ஐந்தாவது இலக்கு, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும்!

இந்த சிந்தனைகள் கொண்ட அரசாகதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து செயல்படுகிறது! இனியும் செயல்படும்! செயல்படும்! என அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளில் உறுதிகூறி, நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு அணிக்கடவு ஊராட்சி

# இராமச்சந்திராபுரத்தில் ரேக்ளா பந்தயம்! 10 இலட்சம் மதிப்பிலான பரிசுகள்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் மற்றும் - க.ஈஸ்வரசாமி எம்.பி. வழங்கினர்!

*திருப்பூர், டிச. 8 -*

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் வடக்கு ஒன்றியம், அணிக்கடவு ஊராட்சி இராமச்சந்திராபுரத்தில் 200 மீட்டர் மற்றும் 300 மீட்டர் தூரம் கொண்ட மாபெரும் ரேக்ளா பந்தயம் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலக் குழுத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில், குடிமங்கலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அணிக்கடவு.ச.கிரி வரவேற்புரையில் நடைபெற்றது.

இதில் செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர்

என்.கயல்விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி ஆகியோர் பந்தயத்தை துவக்கி வைத்து 200 மீட்டர் தூரம் கொண்ட ரேக்ளா பந்தயத்தில் வெற்றி பெற்றவருக்கு முத்தான முதல் பரிசாக TVS RADEON BIKE க்கும், இணையான இரண்டாம் பரிசாக 3/4 பவுன் தங்க நாணயமும், முறையான மூன்றாம் பரிசு 1/2 பவுன் தங்க நாணயமும், நான்காம் பரிசாக 1/4 பவுன் தங்க நாணயமும், ஐந்தாம் பரிசு முதல் பத்தாம் பரிசு வரை 1 கிராம் தங்க நாணயங்களும், பதினொன்றாம் பரிசு முதல் நாற்பதாம் பரிசு வரை வென்றவர்களுக்கு பரிசு கோப்பைகளும்,

300 மீட்டர் தூரம் கொண்ட ரேக்ளா பந்தயத்தில் வெற்றி பெற்றவருக்கு முத்தான முதல் பரிசாக TVS RADEON BIKE கையும், இணையான இரண்டாம் பரிசாக 3/4 பவுன் தங்க நாணயமும், முறையான மூன்றாம் பரிசு 1/2 பவுன் தங்க நாணயமும், நம்பிக்கையான நான்காம் பரிசாக 1/4 பவுன் தங்க நாணயமும், ஐந்தாம் பரிசு முதல் பத்தாம் பரிசு வரை 1 கிராம் தங்க நாணயங்களும்,

பதினொன்றாம் பரிசு முதல் நாற்பதாம் பரிசுகள் வரை பரிசு கோப்பைகள் என மொத்தம் 10 இலட்சம் மதிப்பிலான பரிசுப் பொருட்களை ஒன்றிய கழக செயலாளர் அணிக்கடவு. ச.கிரி ஏற்பாட்டில் செய்தி மற்றும் தமிழ் வளர்ச்சி துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச்செயலாளர்

என்.கயல்விழி செல்வராஜ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் க.ஈஸ்வரசாமி ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.தனசேகர், சி.சியாம் பிரசாத், குடிமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சா.ராஜமாணிக்கம், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஒன்றிய செயலாளர் எஸ்.வி.செந்தில் குமார், பொள்ளாச்சி தெற்கு (தெற்கு) ஒன்றிய செயலாளர், தொண்டாமுத்தூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜி.கதிர்வேல், உடுமலை நகர்மன்ற தலைவர் மு.மத்தீன், கொ.ம.தெ.க. தெற்கு மாவட்டச் செயலாளர் வி.ரகுபதி ராகவன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் வி.ரகுபதி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கார்த்திகேயன், ஒன்றிய குழு உறுப்பினர் கவிதா கிரி, ஊராட்சி மன்ற தலைவர் அழகம்மாள் கருப்புசாமி, குடிமங்கலம் வடக்கு ஒன்றிய அவைத்தலைவர் தா.அற்புதராஜ், துணை செயலாளர்கள் கு.வெங்கடேசன், சா.லட்சுமி, கு.சிவராஜ், பொருளாளர் ப.ஆறுச்சாமி, மாவட்டப் பிரதிநிதிகள் கி.சுப்பிரமணியம், க.சதீஷ் குமார், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் டி.தங்கவேல், ராஜேந்திரன், ஜெகதீஸ்வரன், டி.பாரதி, ரா.உமா மகேஸ்வரி, டி.கல்பனா, ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் ஆர்.ரவி, கா.சாமி, தென்றல் ஆ.சேகர், அரசக்காளை பாசன சபை குருசாமி, மூங்கில் தொழுவு சுரேஷ் விருகம்பட்டி, பொன்னுச்சாமி ஆலமரத்தூர், அணிக்கடவு சுந்தரசாமி, சக்திவேல், செந்தில்குமார், சாந்தி கார்த்திகேயன், கிட்டுச்சாமி, கருப்புசாமி, சத்தியமூர்த்தி, ரங்கசாமி, சுந்தரசாமி, குணசேகரன், சிதம் பரசாமி அணிக்கடவு சுப்பிரமணி, பரமசிவம், செல்வி செந்தில் குமார்,

கொசவம்பாளையம் : நடராஜ், செல்வராஜ், முத்துக்குமார், மணிகண்டன், குமாரசாமி, ஜெயபால், வாகத்தொழுவு: வேலுச்சாமி, சுப்ரமணியம், கந்தசாமி, செல்வராஜ், கணேசன், செல்வராஜ், குப்புசாமி, மாரியப்பன் வீதம்பட்டி: பாலமுருகன், மகேந்திரன், முருகேசன் பொன்னுச்சாமி, சங்கரலிங்கம், விவேக்குமார், மூங்கில் தொழுவு : சாமிநாதன், சக்திவேல், ராஜேந்திரன், கனகராஜ், வடிவேல் விருகல் பட்டி: ஜெயபிரகாஷ், கோபால், யூகநாதன், பன்னாரி, செல்வராஜ், வீரமுத்து, ரங்கநாதன், முருகன் இலுப்பநகரம் : செல்வகுமார், பழனிச்சாமி,

மந்திரியப்பன், ரங்கநாதன், கண்ணன், சுந்தர்ராஜ், சோமவாரபட்டி : கர்ணன், செல்வராஜ், செல்வம், சௌந்தர்ராஜன், சுப்பிரமணியம், மதுரை முத்து, கிட்டுச்சாமி, கார்த்திகேயன், கனகராஜ், நல்லமுத்து வாக்குச்சாவடி நிலை முகவர்கள் : செல்வகுமார், தங்கபொண்ணி, கோவிந்தராஜ், கதிரவன், குணசேகரன், முத்துக்குமார், பிரகாஷ், சக்திவேல், சிவராஜ், மணிகண்டன், தேவராஜ், செல்வராஜ், அமிர்தராஜ், சரவணகுமார், பூபதி, சக்திவேல், ராமு உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் மாவட்டப் பிரதிநிதி மு.உதயகுமார் நன்றியுரையாற்றினார்.



மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின்படி, திருச்சி தெற்கு மாவட்ட கழகம் சார்பில், சட்ட மாமேதை அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு திருச்சி இ.பி. ரோட்டில் அமைந்துள்ள சட்ட மேதை அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமையில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.என்.சேகரன், சபியுல்லா, மாநில இலக்கிய அணி புரவலர் செந்தில் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் மூக்கன், நீலமேகம், தர்மராஜ், பாபு, மோகன், ராஜ்முஹம்மது, விஜயகுமார், மணிவேல், சிவக்குமார், வட்டக் கழகச் செயலாளர் மனோகர் மற்றும் மாவட்ட, மாநகர, மாநில நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள், மாவட்ட மாநகர தொகுதி அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்– விராலிமலை மேற்கு ஒன்றிய கழகம் சார்பில்

# கொடும்பாளூரில் - உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## கரூர் முரளி – கே.கே.செல்லப்பாண்டியன் சிறப்புரை! அ.இளங்குமரன் தலைமை!

*புதுக்கோட்டை, டிச.8-*

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை மேற்கு ஒன்றிய கழகம் சார்பில் கொடும்பாளூரில் கழக இளைஞரணி செயலாளர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் இளங்குமரன் தலைமையிலும், கொடும்பாளூர் ஊராட்சி மன்ற தலைவர் அ. ஆனந்தன் வரவேற்புரையிலும் நடைபெற்றது.

மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, இளம் சொற்பொழிவாளர்கள் தமிழினியன், மதுமிதா ஆகியோர் சிறப்புரையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில், கழக விவசாய அணி துணைத் தலைவர் த.சந்திரசேகர், பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் பழனியப்பன், விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே. ஆர். என். போஸ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், விராலிமலை கிழக்கு ஒன்றியச் செயலாளர் மு.பி.ம. சத்தியசீலன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் துவரவயல் டி.செல்வம், மாவட்ட விவசாய அணி தலைவர் ஏ.பி.ஆர்.ராஜாங்கம், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பாலமுருகன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் கே.ஜி.எஸ்.சுகி, ஒன்றிய குழு உறுப்பினர் கொடும்பாளூர் எம்.ஆர்.அன்பழகன், தேன்கனிப்பட்டி ராஜா, இரா. மூக்கையா, என்.எஸ். கே.நல்லதம்பி, நா.சி.பழனிச்சாமி, பெ.கண்ணன், இரா.பாலசுப்பிரமணியன், என். வீராச்சாமி, சி.சி.செல்வம், செ. கோபால், தகவல் தொழில்நுட்ப அணி சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர் எழில் ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர். முடிவில்

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சிவா நன்றியுரையாற்றினார். கூட்டத்தில் பார்வையற்றவர்கள், பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் ஆலோசனைப்படி 106கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பில். நம்பியூர் ஒன்றியத்தில் ஒன்றிய கழகச் செயலாளரும், நம்பியூர் பேரூராட்சி மன்ற தலைவருமான மெடிக்கல் பா.செந்தில் குமார் தலைமையில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ச.செந்தில்குமார் முன்னிலையில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ஆ.பூர்ணசந்திரன் ஏற்பாட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் தாய்மார்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. மேலும் புதுசூரிபாளையம் அங்கன்வாடி மையத்திற்கு இரண்டு மின்விசிறிகள், குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் கீதா முரளி, கோபி சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் கதிரவன், வினோத், சங்கவி, நம்பியூர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சீனிவாசன், ரகு, நம்பியூர் பேரூராட்சி ஒருங்கிணைப்பாளர் கலைஞர் கதிரேசன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் தீபா தமிழ்செல்வன், மைக் பழனிசாமி உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.